සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education - NWP**
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

22 T I

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

**சுட்டிலக்கம் ........................................ தமிழ்மொழியும் இலக்கியமும் I நேரம் : 1 மணித்தியாலம்**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

- **பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்திற் காணப்படும் சொல் பற்றிய வினாவிற்கான விடையைத்** தெரிவு செய்க.

01. “வண்டோ கானகத்திடையிருந்து வந்தே கமல மதுவுண்ணும் இங்கு “**கமலம்**” என்பதன் ஒத்தகருத்துச் சொல்.
1. மல்லிகை 2. தாமரை 3. இதழ் 4. கடுபுல்

02. எழுந்த கொழுங்கன லென்ன எழுந்தார். இங்கு கனல் என்பதன் பொருள்.
1. நெய் 2. நாம்பல் 3. நெருப்பு 4. நீர்

03. வெகுளி பொங்கி பகைவரை நிந்திப்பார். இங்கு வெகுளி என்பது,
1. கோபம் 2. பாசம் 3. அன்பு 4. கருணை

04. நாவலரின் காசம் அவர்களுக்கு அனுகூலமாயிற்று இங்கு அனுகூலம் என்பதன் எதிர்ப்பதம்.
1. சாதகம் 2. பிரதிகூலம் 3. வாய்ப்பு 4. சந்தர்ப்பம்

05. அந்த விழாவில் மங்கையரும் கலந்து கொண்டனர். இங்கு மங்கையர் என்பதன் எதிர்ப்பதம்.
1. ஆடவர் 2. மாதர் 3. பேதையர் 4. சிறுமியர்

- பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

06. குயில் கூவும் என்பது போல வானம்பாடி,
1. சொல்லும் 2. பாடும் 3. கத்தும் 4. அகவும்

07. வயலும் வயல் சார்ந்த நிலமும்,
1. குறிஞ்சி 2. முல்லை 3. மருதம் 4. நெய்தல்

08. மணிவிழாவைக் குறிக்கும் வேறொரு பெயர்.
1. பொன்விழா 2. வைரவிழா 3. பவளவிழா 4. அமுதவிழா

09. பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் மருந்துப்பெயர் கொண்ட நூல்களுள் ஒன்று.
1. நாலடியார் 2. நான்மணிக்கடிகை 3. திரிகடுகம் 4. இன்னா நாற்பது

10. குண்டு - வடவை என்பது போல போத்து
1. பிணை 2. பிணா 3. கலை 4. பெட்டை

11. சுப்பர் மார்க்கட் (*Super Market*) என்பதன் தமிழ் வடிவம்.
1. நாளங்காடி 2. அங்காடி 3. அல்லங்காடி 4. சிறப்பங்காடி

12. செய்யுளில் சீர்களின் இரண்டாவது எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது.
1. எதுகை 2. மோனை 3. சிலேடை 4. மடக்கு

13. அந்த முதியவர் குளிரால் நடுநடுகிங்கினார். இங்கு நடுநடுங்கி என்பது.
1. இரட்டைக்கிளவி 2. அடுக்குத்தொடர் 3. அடுக்கிடுக்குத்தொடர் 4. இணைமொழி

14. “இப்படியிருக்கலாம்” என்பது.
1. கருதுகோள் 2. எடுகோள் 3. உபகோள் 4. திசைகோள்



kalvi.lk

15. பின்வருவனவற்றுள் இருபாற் பொதுப்பெயரல்லாதது.
1. இவர் 2. விவேகி 3. தலைவன் 4. ஜனாதிபதி

16. அலுமாரி என்பது.
1. இயற்சொல் 2. திரிசொல் 3. திசைச்சொல் 4. வடசொல்

17. துன்பம் தொடரும் எனும் பொருளை விளக்கும் பழமொழி.
1. நிழலின் அருமை வெயிலிற் தெரியும் 2. பட்டகாலிலேபடும் கெட்ட குடியே கெடும்
3. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் 4. சுகமும், துக்கமும் மாறிமாறி வரும்

18. ஆசிரியரைக் கண்ட மாணவி தலை வணங்கினாள் இங்கு “தலைவணங்கினாள்” என்பது
1. உவமைத்தொகை 2. உம்மைத் தொகை
3. வேற்றுமைத் தொகை 4. வினைத் தொகை

19. சக்கரம், தண்டு, சங்கு, தனு, வாள் என்பன முறையே
1. பஞ்சாயுதம் 2. பஞ்சோத்திரம் 3. பஞ்சகௌவியம் 4. பஞ்சபூதம்

20. சாந்தன் காதில் ஓதும் பழக்கமுடையவன். இங்கு காதிலோதுதல் என்பது.
1. கோள்சொல்லுதல் 2. மந்திரம் சொல்லுதல்
3. ஏமாற்றுதல் 4. கதைத்தல்

பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

21. “ட” கரம் இயல்பொலியாக வந்த சொல்
1. பட்டம் 2. சட்டகம் 3. பாடம் 4. விட்டில்

22. என் செல்லக் குட்டி வந்தாள் இங்கு இடம்பெற்ற வழு
1. பால்வழு 2. திணைவழு 3. எண்வழு 4. வினாவழு

23. உம்மிலை ஒரு குறையுமில்லை இங்கு உம்மில் என்பதன் நியம வழக்கு
1. உன்மேல் 2. உன்னில் 3. உன்னால் 4. உன்

24. பகுபதவுறுப்புகளில் சாரியை இடம்பெறுவது
1. பகுதிக்கும் இடைநிலைக்குமிடையில் 2. பகுதிக்கும் விகாரத்திற்குமிடையில்
2. சந்திக்கும் இடைநிலைக்குமிடையில் 4. இடைநிலைக்கும் விகுதிக்குமிடையில்

25. பின்வருவனவற்றுள் குற்றியலுகரமல்லாத சொல்
1. வண்டு 2. பட்டு 3. கதவு 4. கொக்கு

26. பின்வருவனவற்றுள் உயிர்முன் மெய் புணர்தலாக அமைவது
1. வாழை + இலை 2. கடல் + அலை 3. மலை + அருவி 4. கலை + விழா

27. பெயரெச்சமாக அமைந்த சொல்
1. பாடி 2. பாடிய 3. பாடு 4. பாட்டு

28. “எதற்கும் கலங்காத வீரத்தமிழ் மகள் போல என்னைக் கண்டவுடன் அவள் கண்கள் சிரித்தன” இவ்வாக்கியத்தில் வந்துள்ள அணி
1. உவமையணி 2. உருவக அணி 3. சிலேடையணி 4. உயர்வு நவிற்சி அணி

29. எங்கேயோ போகப் போகிறோம். இவ்வாக்கியத்தின் எழுவாய்
1. எங்கேயோ 2. போக 3. போகிறோம் 4. நாம்

30. வல்லினம், மெல்லினம், இடையினம் அந்த மூன்றையும் கொண்ட சொல்
1. தாழ்வு 2. பழம் 3. தமிழ் 4. பண்பு



kalvi.lk

- பின்வரும் பந்திகளின் பிரதான கருத்தைத் தெரிவு செய்க.

31. பாலோடு கலந்த நீரானது பாலாகவே தெரியும் நீராக இருக்க மாட்டாது. சிறுமைக் குணமுடையவர்களும் உயர்ந்த குணமுடைய பெரியோருடன் சேர்ந்தால் மேன்மக்களாவார்.
    1. பாலிலிருந்து நீர் தனிப்பட்டுத் தெரியாது.
    2. கீரோழ் மேலோரைச் சேர்ந்தால் மேன்மக்களாவர்.
    3. கீழோர் நீரைப் போன்றவர்கள்.
    4. கீழோருடன் சேர்வதால் மேலோர் பாதிக்கபடுவர்.

32. நூலாசிரியர் தமது நூலைப் பற்றித் தாமே எழுதும் உரையும் பிற அறிஞர் வழங்கும் புகழுரையும் இடம் பெறுவதை அதிகமான நூல்களில் காணலாம்.
    1. அனைத்து நூல்களுக்கும் முகவுரையும், பொருளடக்கமும் அவசியமாகும்.
    2. நூல்களுக்கு புகழுரை அவசியமானது.
    3. நூல்களில் பிரதானமாக முகவுரையும், அணிந்துரையும் இடம்பெறும்.
    4. அநேக நூல்களில் நூல் அறிமுகமும் வாழ்த்துப்பாவும் காணப்படும்.

- வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.

33. தற்காலத்தில் காடுகள் அழிக்கப்படுவதால்
    1. வெப்பம் அதிகரிக்கும்
    2. வெப்பம் அதிகரித்துள்ளது.
    3. வெப்பம் அதிகரித்தன.
    4. வெப்பம் அதிகம்

34. நீர் இங்கே இருந்தீரென நான் அறிந்திருந்தால்
    1. உடனே வந்திருப்பேன்
    2. உடனே வந்தேன்
    3. உடனே வருவேன்
    4. உடனே வருகின்றேன்.

35. என்னுடைய பிள்ளைகள்
    1. இதுகளல்ல
    2. இவைகளல்ல
    3. இவர்களல்ல
    4. இவர்களல்லர்

36. அவன் கேட்டான் நீ
    1. எந்நாட்டவர் என்று
    2. எந்நாட்டவரைச் சேர்ந்தவரென்று
    3. எந்நாட்டைச சேர்ந்தனி என்று
    3. எந்நாட்டைச் சேர்ந்தாய் என்று

- புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்பவதற்கு மிகப்பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

37. புரவலரை நாடிச் சென்ற .................................. பெரும் பொருள் பெற்றுத் திரும்பினார்.
    1. இரவலன்
    2. மன்னன்
    3. செல்வன்
    4. வள்ளல்

38. நாம் ஈடுபடும் காரியம் கை கூடாதவிடத்து
    1. அங்கலாய்த்தல்
    2. ஆரவாரித்தல்.
    3. அகமகிழ்தல்
    4. கொட்டமடித்தல்

39. அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் செயலாளரால் அறிக்கை
    1. சமர்ப்பிக்கப்பட்டது
    2. சமர்ப்பித்தார்
    3. சமர்ப்பித்தது
    4. சமர்ப்பிக்கப்பட்டன

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக்கிடக்கின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தி எழுதினால் கட்டுக் கோப்பான பந்தியொன்று அமையும். அதற்குப் பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

    அ. அது பேதுருதாலகால மலையில் உற்பத்தியாகிறது.
    ஆ. பள்ளங்களினூடாகப் பாய்ந்து சென்று நாட்டை வளமும் செழிப்பும் உடையதாகவும் அது ஆக்குகின்றது.
    இ. அது ஒரு பெருநதி
    ஈ. பள்ளத்தை நோக்கி வருவதுடன் அது நின்று விடவில்லை.
    உ. பின்னர் பள்ளத்தை நோக்கி ஓடிவருகின்றது.

    1. இ, அ, உ, ஈ, ஆ
    2. இ, உ, அ, ஈ, ஆ
    3. இ, அ, உ, ஆ, ஈ
    4. ஈ, உ, ஆ, இ, அ

(40 புள்ளிகள்)

***



kalvi.lk

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

வயඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education - NWP**
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

22 T II

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

சுட்டிலக்கம் ........................................ தமிழ்மொழியும் இலக்கியமும் II நேரம் : 2 மணித்தியாலம்

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01. சுருக்கமான விடை எழுதுக.

1. "மழையிருட்டில் தெருவிலொரு வெளிச்சமது ஓவென்றக் குரலினோடு" என்ற தொடரை சந்திபிரித்து எழுதுக.
2. நீ ஏன் நேற்று பாடசாலைக்கு வரவில்லை என்று நிசா கேட்டாள் பொருத்தமான நிறுத்தற்குறியிட்டு மீண்டும் எழுதுக.
3. கடல் அலை போல என் மனக்கண்ணே என் தாயின் நினைவுகள் வந்து போகிறது. இதில் வந்துள்ள அணியைக் குறிப்பிடுக.
4. "ஆடு" என்பது பெயராகவும் வினையாகவும் வர வாக்கியம் அமைக்குக.
5. காலையில் எழும்ப வேண்டும் என்று அம்மா கூறினாள். இவ்வாக்கியத்தில் உள்ள தலைமைத் தொடரையும், சார்பு தொடரையும் எழுதுக.
6. இராமன் காட்டுக்கு சென்றான்.
   இலக்குவன் காட்டுக்கு சென்றான்.
   மேற்படி இரு வாக்கியங்களையும் "உம்" எனும் இணைப்பிடைச் சொல்லை பயன்படுத்தி கூட்டு வாக்கியம் ஆக்குக.
7. தொழின் முறைக் கடித வகைக்கு இரண்டு உதாரணம் தருக.
8. என்ன நடந்தாலும் எமது கொள்கையைக் கைவிடமாட்டோம். இவ்வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.
9. கட்டுரையின் உறுப்புக்களைக் குறிப்பிடுக.
10. காணாமல் போன சீதாவின் தம்பியின் சடலம் கடலில் மீட்கப்பட்டது. இவ்வாக்கியத்தின் பொருள் மயக்கம் நீக்கி மீண்டும் எழுதுக.

(2x10 = 20 புள்ளிகள்)

02. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்கு பொருத்தமான தலைப்பு இடுக.

அ) உலகமும் அதனைச் சூழ்ந்துள்ள அத்தனை ஜீவராசிகளுக்கும் சூழலின் முக்கித்துவம் இன்றியமையாததாகும். இச்சூழலை நாம் பேணிப் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். அதனைப் பாதுகாக்காவிட்டால் உயிரினங்கள் பல வழிகளிலும் பாதிக்கப்படும். சூழலின் முக்கியத்துவம் பற்றியும் அதனைப் பாதுகாக்கும் வழி வகைகள் பற்றியும் எடுத்துக் கூறி ஒரு விளக்கக் கட்டுரை.

ஆ) மாணவப்பருவம் மகத்தான பருவம் விலை கொடுத்து வாங்க முடியாத இப்பருவத்தை உரிய முறையில் பயன்படுத்தி வெற்றி வாகை சூடுவோம் எனும் தொனிப்பொருளில் மேடைப்பேச்சு.

இ) இன்றைய மனிதன் அறிவியலை ஆக்கத்திற்கு பயன்படுத்துகின்றான். எனக் கூறும் ஒருவனுக்கும் இல்லை இழிவுப்பாதையிலேயே பயன்படுத்துகிறான் என்று கூறும் இன்னொருவனுக்குமிடையில் இடம்பெறும் உரையாடல்.



kalvi.lk

ஈ) பொருளாதார ரீதியில் முன்னேற வேண்டுமென்ற பேராசையோடு கணவனையும் பிள்ளைகளையும் விட்டு வெளிநாடு சென்ற ஒருத்தி பெரும் பொருளீட்டி வீடு திரும்பும் போது .......
எனும் கருவை மையமாகக் கொண்ட சிறுகதை.

(25 புள்ளிகள்)

03. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் சாராம்சத்தை 40 - 45 சொற்களில் அமைய கூடியவாறு எழுதுக. (சொற்களின் எண்ணிக்கையைக் குறிப்பிடுக.)

சிலப்பதிகாரம் என்பது தமிழில் உள்ள ஐம்பெரும் காப்பியங்களுள் ஒன்றாகும். காவிரிப்பூம்பட்டினத்திலே பெருங்குடி வணிகர் குலத்தில் பிறந்த கற்புக்கரசி கண்ணகி, அவள் கணவன் கோவலன் என்பவர்களுடைய வரலாற்றை உரைப்பது முத்தமிழ்ப் புலமையும் கவித்திறனும் வாய்ந்த இளங்கோவடிகளால் இயற்றப்பட்டது. படிப்பவர் மனதைக் கவரும் சொற்சுவையும் நிறைந்தது புகழ்மிக்க மூவேந்தர்களுடைய குளிர்ந்த சோலை என்று கருதப்படும் தமிழகத்தின் பகுதிகளாகிய சேர, சோழ, பாண்டிய நாட்டின் இயல்புகளையும் முறையே அவற்றின் தலைநகரங்களாகிய வஞ்சி, பூம்புகார், மதுரை என்பவற்றின் பெருமைகளையும் எடுத்துரைப்பது. அந்த நகரங்களில் இருந்து நல்லாட்சி புரிந்த சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் தருமம், வீரம், அரசியல் முறைமை முதலியவற்றையும் மக்களின் ஒழுக்கம், ஊக்கம் ஆகியவற்றையும் நன்கு புலப்படுத்துவது, மற்றும் அக்கால உழவுத்தொழில், வணிகம், கைத்தொழிற் பெருக்கம், அரசியல், கல்வி, சமயநிலை முதலானவற்றையும் அறியலாம். அரசியலில் தவறுவிடும் மன்னர்களை அறம் என்ற கவுள் தண்டிப்பார். கற்பில் சிறந்த பெண்களை அனைவரும் போற்றுவர், ஒருவர் ஒரு பிறவியில் செய்த வினைகள் அவரது பிறவிகள் தோறும் தொடரும் ஆகிய மூன்று பெரும் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது. இதனை இயல், இசை, நாடகக் காப்பியம் எனவும் உரையும் செய்யுளும் கலந்த உரையிட்ட பாட்டுடைச் செய்யுள் எனவும் கூத்தும் பாட்டும் இடையிடை அமைந்த நாடகக் காப்பியம் எனவும் கூறுவர். (10 புள்ளிகள்)

04. பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

அமுதம் சுரக்கம் நெல்லிக்கனி தமிழகத்தில் உண்டு என்பதை அறிந்தான் அதியமான் என்ற சிற்றரசன். அதனை அருந்தி நீடுழி காலம் வாழ ஆசைப்பட்டான் மந்தியும் அறியா மரங்கள் செறிந்த தென்மலையில் வேடரும் அணுகுவதற்கு அரிய வீடொன்றில் நின்றது அந்நெல்லி. அதை அறிந்த காவலன் பல்லாண்டுகளாகப் பெரிதும் முயன்று வழியமைத்து, மருந்து தூவி மலை வண்டுகளை எல்லாம் விலக்கி மறைந்திருக்க நெல்லிக் கனியைக் காவலன் மூலமாகப் பெற்றான்.

பல்லாண்டுக்கு ஒருமுறை பழுக்கும் பாண்மை வாய்ந்த அந்நெல்லிக்கனியின் வண்ணத்தை அரசன் அங்கையில் வைத்து நோக்கி அகமகிழ்ந்திருக்கையில் சொல்லின் செல்வியாகிய ஔவையார் செந்தமிழ்ச் கவிபாடி அவன் முன்னே சென்றார். அப்பாட்டியின் செந்தமிழ்ச் சுவையை செவியாரப் பருகிய அதியமான் மது உண்டவன் போல் மகிழ்ந்தான். அதி மதுரக் கவி பாடிய ஔவையாருக்கு அமுதம் பொழியும் நெல்லிக் கனியே ஏற்ற பரிசென்று எண்ணி, அங்கையில் இருந்த அக்கனியை அகமகிழ்வுடன் அளித்தான்.

1. அதியமான் என்பவர் யார்?
2. நெல்லிக்கனியின் தன்மை எப்படியானது?
3. நெல்லிக்கனியை பெற்றுக் கொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள் எவை?
4. ஔவையாரின் பாடலைக் கேட்டு அதியமான் எவ்வாறு இன்பமடைந்தான்?
5. சொற்களின் பொருளை எழுதுக.
   அங்கை - மது -
   அகம் - கவி -

(2*x*5 =10 புள்ளிகள்)

05. பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவு செய்து 100 சொற்களில் அமையுமாறு எழுதுக.

அ) உமது பாடசாலையில் இருந்து கல்விச்சுற்றுலா செல்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்ற நிலையில் அதில் நீரும் கலந்து கொள்வதற்காக வெளிநாட்டில் தொழில் புரியும் உமது தந்தையிடம் சுற்றுலாவின் பயன் தொடர்பாக விளக்கி அனுமதி கோரும் கடிதம்.

அல்லது

ஆ) போதைப்பொருள் பாவனையைத் தடுப்போம் என்ற தலைப்பில் இளைஞர்களை விழிப்புணர்வூட்டும் வகையிலான துண்டுப் பிரசுரம். (15 புள்ளிகள்)



kalvi.lk

සියලු හිමිකම් ඇවිරිණි/ All Rights reserved

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**Provincial Department of Education - NWP**
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

**22 T III**

පළමු වාර පරීක්ෂණය - 10 ශ්‍රේණිය - 2018
First Term Test - Grade 10 - 2018
முதலாம் தவணைப் பரீட்சை - தரம் 10 - 2018

**சுட்டிலக்கம் ......................................** **தமிழ்மொழியும் இலக்கியமும் III** **நேரம் : 2 மணித்தியாலம்**

- **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **1, 2, 3, 4 ஆகிய வினாக்களுக்கும் 5, 6, 7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**

01. சுருக்கமான விடை எழுதுக.

1) கழாக்காலி பள்ளியுள் வைத்தற்று ........ இதில் கழாக்ககால் என்பதன் பொருள் யாது?
2) வெற்றிவேற்கை எனும் நீதி நூலைப் பாடியவர் யார்?
3) தக்கதருணம் வரும் வரை பொறுமை இருப்பவர்கள் யாவர் என்று ஔவையார் கூறுகின்றார்?
4) திரிகடுகம் என்ற நூல் எக்காலத்திற்கு உரியது ?
5) முதுமொழி வெண்பாவில் கூறப்பட்டுள்ள பழமொழியைத் தருக.
6) ஆறுமுகநாவலரை வருத்திய நோய் எது?
7) "நாவலர் எழுந்தார்" எனும் கட்டுரையில் குறிப்பிட்டப்படும் கூட்டத்திற்கு வருகை தந்தோரில் நான்கு வகையினரைக் குறிப்பிடுக.
8) விசுவநாதப் பிள்ளை அவர்களின் தலைமையில் நடைப்பெறுகின்ற கூட்டத்திற்கு எனன் பெயர் வைத்திருக்கலாம் என்று கூறப்பட்டது ?
9) பாரதியினால் படைக்கப்பட்ட இலக்கியங்கள் இரண்டினை தருக ?
10) பாரதி, தாம் விரும்பியவற்றை அடையமுடியாதவர்கள் இயல்புகளாகக் குறிப்பிடும் விடயங்களில் இரண்டினைத் தருக ? (2*x*10=20 புள்ளிகள்)

02. பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைத் தருக.

1. தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற் வோங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலா காதே!
தெள்ளி யஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அன்னல் யானை
அணிதேர் புரவி ஆட்பெரும் படையொரு
மன்னர்க ளிருக்க நிழலா கும்மே!
அதனால்
பெரியோ ரெல்லாம் பெரியரு மல்லர்
சிறியோ ரெல்லாம் சிறியரு மல்லர்.

(1) இப்பாடலில் கூறப்பட்டள்ள நீதிக் கருத்து யாது ?
(2) இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணி யாது ?



kalvi.lk

2. யானை அனையவர் நண்புஒரீஇ நாய்அனையார்
கேண்மை தழீஇக் பாகனையே கொல்லும்
எறிந்தவேல் மெய்யதா வால்குழைக்கும் நாய்

(1) நாலடியார் என்றால் என்ன?
(2) யாருடைய நட்பை தவிர்த்து, யாருடைய நட்பை நாம் தழுவ வேண்டும் என்று நாலடியார் கூறுகின்றார்?

3. கற்றாமுன் கல்வி உரைத்தல் மிகஇனிதே
மிக்காரைச் சேர்தல் மிகமான முன்இனிதே
எள்துணை யானும் இரவாது தான்ஈதல்
எத்தணையும் ஆற்றல் இனிது

(1) இப்பாடலை பாடிய ஆசிரியர் யார்?
(2) இப்பாடலில் கூறப்பட்டுள்ள நற்கருத்துக்கள் இரண்டினைத் தருக?

4. நீரெ டுத்து வருதற் கவள்மணி
  நித்தி லம்புன் னகைசுடர் வீசிடப்
போரெ டுத்து வருமதன் முன்செலப்
  போகும் வேளை யதற்குத் தினந்தோறும்
வேரெடுத்துச் சுதந்திர நற்பயிர்
  வீழ்த்தி டச் செய்தல் வேண்டிய மன்னர்தம்
சிரெ டுத்த புலையிர்ச் சாரர்கள்
  தேச பக்தர் வரவினைக் காத்தல் போல்.

(1) பின்வரும் அரும்பதங்களுக்கான பொருள் தருக.
மதன் - நித்திலம் -
(2) இப்பாடலில் கையாளப்பட்டுள்ள அணிகள் யாவை ?

5. பிறிற்றோ என்பவர் பிரசித்தி பெற்ற பழுத்த வழக்கறிஞர். அக்காலத்துச் சட்ட நிபுணர்களுள்ளே தலைசிறந்தவர் அவர். இலங்கையிலேயுள்ள எல்லோரும் அவரை அறிவர். கொழும்பிலும் யாழ்ப்பாணத் -திலும் அவருக்குப் பெரிய பேர். பாரிய வழக்குகளுக்கும் அப்பில்களுக்கும் அவரை நியமிப்பது வழக்கம். அவருக்கு யாழ்ப்பாணத்தில் அளவு கடந்த செல்வாக்கு அந்த நாட்களில் இருந்தது.

(1) பிறிற்றோ பற்றிக் கூறுக ?
(2) பிறிற்றோவின் செல்வாக்கு எங்கெல்லாம் பரவியிருந்தது ?

(4x5 = 20 புள்ளிகள்)

03. விவேக சிந்தாமணியினை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

(1) அறிவுடையோரின் இயல்பினை விளக்குக ?
(2) அறிவிலாதவர் பண்பினை விளக்குக ?

(15 புள்ளிகள்)

04. (1) வை.விசுவநாதப்பிள்ளையின் சிறப்புகளையும், சேர். பொன். இராமநாதனின் சிறப்புக்களையும் எடுத்துரைக்க.
(2) ஆறுமுகநாவலரின் நேர்மை காட்டப்படுமாற்றினை விளக்குக.

(15 புள்ளிகள்)



kalvi.lk

05. முதுமொழி வெண்பாவை அடிப்படையாகக் கொண்டு அவரவர் மனங்களுக்கேற்பவே வாழ்வு சிறக்கும் என்பதை விளக்குக ?

(10 புள்ளிகள்)

06. பாரதியார் சுயசரிதையில் தாம் விரும்பியவற்றை அடைய முடியாதவர்களின் இயல்புகளைப் பாரதியார் எவ்வாறு கூறுகின்றார் ?

(10 புள்ளிகள்)

07. பின்வருவன யாரால், யாருக்குக் கூறப்பட்டது.

அ. அது கிடக்க எடுத்துக் கொண்டு வா தந்தி தபாற் கட்டுக்களை.

ஆ. ஒருவர் ஒருவராகவோ, இருவர் இருவராகவோ அன்றிப் பலர் கூட்டம் கூட்டமாகவோ வாதத்திற்கு வரலாம்.

(10 புள்ளிகள்)

***

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.



Conducted by
**Pathmanathan Pathmaraj**
(BIT, B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)

**TAMIL MEDIUM**
**ENGLISH MEDIUM**

**MONTHLY**
**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page